# கண்ணனை சீராட்டல்




எண்ணைத்தேய்த்து உனக்கு நீராட்ட,

அன்னை நானும் அழைத்திட்டேன்;

கண்களைக் கைகளால் கசக்கி நீயும்,

என்னை ஏய்த்திட முடியாது கண்ணா !

மண்ணில் புரண்ட உன்தன் உடலை,

எண்ணில் என் மனமும் நோகுதடா;

உடலெல்லாம் எண்ணைத் தேய்த்து,

தடவிட நானும் அழைத்தேன் கண்ணா!

நன்னீரால் முதலில் உன்னை நீராட்டி,

நறுமணப் பொடியை உடலில் தடவியு

மறுகணம் வாசனை உடலில் பரவிட,

பன்னீரால் நீராட்டி விடுவேன் கண்ணா !

வாரமொருமுறை இது போல் நீராட்டி,

ஈரம்போக உலர்ந்த துணியால் துவட்டி;

தூபம் இட்டு அதில் உன்னைக் காட்டிட,

கோபம் கொள்வதேனோ சொல் கண்ணா !

சிறந்த ஆடைகளை நான் தேர்ந்தெடுத்து,
பிறந்தவுன் மேனியில்அதை சாத்திவிட்டு
திறந்த உன்கண்களில் மையிட்ட நானும்,
மறந்தேன் என்னை உன்னழகில் கண்ணா1
என்கண்ணே பட்டுவிடுமென்று உன்தன்,
கன்னத்தில் திருஷ்டி பொட்டும் வைத்து
கள்ளச் சிரிப்பு புரிந்திட்ட உன்தனையே,
மெள்ள எடுத்து அணைத்திடுவேன் கண்ணா
விண்ணிலுள்ள அம்புலியைக் காட்டியே,
உண்ண உணவைத் தந்திட நீயும் தினம்;
பண்ணிய பாட்டை என்தன் மனதினில்,
எண்ணியெண்ணி மனம் நொந்தேன் கண்ணா!
மண்ணையள்ளி நீயும் உண்டாயென்று,
உன்னைக் கயிறால் கட்டவந்தஎன்னிடம்
கண்ணைக் கசக்கியே நீ அழுதிடும் போது,
என்னையே நான் சினந்துகொண்டேன் கண்ணா!
மற்ற ஊர்ச்சிறுவர்களுடன் நீயும் சேர்ந்து,
கற்ற கள்ளத் தனங்களையெல்லாம் நான்
கண்டித்து பார்த்தும் நீயும் திருந்தாததால்,
தண்டிக்க நேர்ந்த்தே என்ன செய்வேன் கண்ணா !
எறும்பு போன்று தினமும் நீ செய்திடும்,
குறும்புகளெல்லாம் பொறுக்க முடியாதே
இரும்பாக்கிக் கொண்டேன் என் மனதை,
திரும்பவும் எனை வருத்தாதே நீயும் கண்ணா!